| DEPOSITION OF WITNESS<br>(Chapter XXIII code of Criminal Procedure)<br>IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MANAPPARAI<br>Present : Thiru.R.Ashokumar, B.com.,B.L.<br>Judicial Magistrate, Manapparai | |
|---|---|
| Date: 04.06.2026 | |
| STC No.989/2025 | |
| சாட்சி :RW1 | |
| பெயர் : திருமதி.மாரியம்மாள் | ஜாதி : |
| த/பெ/க/பெ. : திரு. மனோகரன் | தொழில் : அரசு பணி ஓய்வு |
| கிராமம் : | சமயம் : |
| தாலுக்கா : | வயது : 63 /2026 |
| ( எதிரி ஆஜர் , வழக்கறிஞர் ஆஜர்) | |

---

**முதல் விசாரணை (எதிரி தரப்பில்)**

1. நான் மேற்படி முகவரியில் வசித்து வருகிறேன். ஜனவரி 2020 ம் ஆண்டு டிஇஓ ஆபிசில் மாற்று பணியில் வேலை பார்த்தேன். அங்கு திரு.கருணாகரன் என்பவர் இளநிலை உதவியாளராக வேலை பார்த்தார். எனது அக்காவின் கணவர் திரு. மாரியப்பன் என்பவர் பலசரக்கு கடை நடத்தி வந்தார். அதற்கு பணம் தேவைப்பட்டதால் கருணாகரணிடம் , மாரியப்பன் வீட்டு அசல் பத்திரத்தை கொடுத்து ரு. 2 லட்சம் வாங்கி கொடுத்தேன். அதற்கு இணையாக நிரப்படாத காசோலை ஒன்றையும் கொடுத்தேன். அந்த பணத்திற்கு மாரியப்பன் என்பவர் மாதம் ரூ. 6000/- வீதம், கருணாகரணிடம் கொடுத்து வந்தார். சுமார் ஒரு ஆண்டுகளுக்கு பின் ரூ.2 லட்சம் கருணாகரணிடம் திருப்பி கொடுத்துவிட்டார். கருணாகரன் என்பவரிடம் இராமநாதபுரத்தில் உள்ள மாவட்ட கல்வி அலுவலகத்தில் மாறுதல் வாங்கி தரும்படி கோரினேன். அதற்கு ரூ. 2 லட்சம் கேட்டார். நான் ரூ. 15, 000/- அட்வான்ஸ் தொகை எனது வீட்டில் வைத்து கொடுத்தேன். அவர் எனக்கு மாறுதல் பெற்று தரவில்லை. நானாக நேரடியாக சென்னை சென்று அதிகாரிகளை சந்தித்து எனது பெண்ணிற்கு இரண்டு குழந்தைகள் பிறந்த விபரத்தை எடுத்துச்சொல்லி நானாக மாறுதல் பெற்றுக்கொண்டேன். 2021 ம் ஆண்டு இராமநாபுரம் மாவட்டத்தில் உள்ள பரமக்குடியில் சென்றுவிட்டேன். திரு. கருணாகரன் நான்தான் எல்லா ஏற்பாடும் செய்து வைத்தேன், எனக்கு மீதி பணம் வேண்டும் என்று கேட்டார். பின்பு மாரியப்பன் பத்திரத்தையும், எனது காசோலையும் கொடுக்க மறுத்துவிட்டார். நான் ஜீன் 22 ல் ஓய்வு பெற்றுவிட்டேன். நான் ஓய்வு பெற்று 6

மாதங்கள் சென்ற பின்பு எனக்கு ரூ.7 லட்சம் ரொக்கமாக கொடுத்தாக திரு. வெங்கடேஷ் என்பவர் மூலம் எனக்கு நோட்டீஸ் அனுப்பினார். நான் கருணாகரனிடம் வாங்கிய பணத்தை மாரியப்பன் கொடுத்துவிட்டார். ஆனால் பத்திரமும், காசோலையும் கொடுக்கவில்லை. எனது மாறுதல் பணத்தை நான் கொடுக்கவில்லை என்ற காரணத்தினால் வெங்கடேசன் என்பவரிடம் காசோலையை அளித்து என் மீது வழக்கு பதிவு செய்துள்ளார். நான் ஓய்வு பெற்ற பின்பு யாரிடமும் பணம் வாங்க வேண்டிய அவசியம் ஏற்படவில்லை.

**புகார்தாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

2. மாரியப்பன் என்பவர் உயிரோடு இருக்கிறரா என்றால் உயிரோடு இருக்கிறார். அவரை நீதிமன்றத்திற்கு வரவைக்க முடியுமா என்றால் முடியும். மாரியப்பன் தேவைக்கு அவருடைய வீட்டு பத்திரம் கொடுத்தார், எனது காசோலையை ஏன் கொடுத்தேன் என்றால் மாரியப்பனிடம் செக் இல்லாததால் எனது காசோலையை கொடுத்தேன். மாரியப்பன் பத்திரத்தின் பதிவு நம்பர் தெரியுமா என்றால் எனக்கு ஞாபகமில்லை. நான் அதுபோன்று பத்திரத்தை கொடுக்கவில்லை என்றும் அப்படி கொடுத்திருந்தால் அந்த பத்திர நம்பரை குறிப்பிட்டு சொல்லியிருப்பேன் என்றால் சரியல்ல.

3. கருணாகரணை கடைசியாக எப்போது பார்த்தேன் என்றால் எனக்கு ஞாபகமில்லை. கருணாகரணிடம் கொடுத்த பத்திரம், காசோலை கேட்டு தராததால் காவல்நிலையத்தில் ஏதும் புகார் கொடுத்தேனா என்றால் தற்போது வழக்கு தாக்கல் செய்த பின்பு புகார் கொடுத்தேன். வெங்கடேஷ் என்பவர் கொடுத்த அறிவிப்பில் பதில் அறிவிப்பு ஏதும் கொடுத்தேனா என்றால் கொடுத்தேன். எனது வழக்கறிஞர் வைத்து கொடுத்தேன். எந்த தேதி என்றால் எனக்கு தெரியாது. நான் வழக்கறிஞர் அறிவிப்பு புகார்தாரருக்கு கொடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல.

4. பணிமாறுதல் சம்மந்தமாக நான் ரூ. 15,000/- கொடுத்தற்கு மோசடி செய்தது சம்மந்தமாக காவல்நிலையத்தில் புகார் ஏதும் கொடுத்தேனா என்றால் புகார் கொடுக்க வேண்டிய அவசியம் ஏதும் இல்லை. புகார்தாரர் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பிய பின்பு என் மீது தவறுதலாக குற்றச்சாட்டுகள் சொல்லியுள்ளர் என்று காவல்நிலையத்தில் ஏதும் புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. இந்த வழக்கு தவிர்த்து வேறு வழக்கு ஏதும் என் மீது உள்ளதா என்றால் இல்லை. புகார்தாரரிடம் நான் குடும்ப செலவிற்காக கடன் வாங்கி கொண்டு புரோநோட் எழுதிகொடுத்ததை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பணம் வாங்கியது தொடர்பாக நான், கருணாகரன், மாரியப்பன்

சம்மந்தமாக வீடியோ ஆதாரம் ஏதும் உள்ளதா என்றால் இல்லை. ரூ. 8,40,000/– காசோலையில் உள்ள தொகையும், காசோலை கொடுத்து மோசடி செய்ததால் எனக்கு தண்டனை கிடைக்க வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

Taken over by me in open court read over to the witness and admitted by the witness to be correct.

Sd/–R.Ashokumar,B.com.,B.L.,
Judicial Magistrate,
Manapparai.